பக்கங்கள் 18+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## வல்லிபுரம் காட்டுப் பகுதியில்

# கேரள கஞ்சாவுடன் சிக்கிய இளைஞர்!




(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி, வல்லிபுரம் காட்டுப் பகுதியில் ஒரு கோடி ரூபா

04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 28 திங்கட்கிழமை 10.06.2024 அதிர்வு 315



## இந்திய – இலங்கை உறவுகளை வலுவாகத் தொடர

# மோடி – ரணில் நேரில் உறுதி

தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தியப் பிரதமராகப் பதவியேற்ற நரேந்திர மோடிக்கு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மனமார்ந்த வாழ்த்துக்களை நேரில் தெரிவித்தார். அத்துடன் இந்திய - இலங்கை உறவுகளை வலுவாகத் தொடர இரு நாட்டுத் தலைவர்களும் மீண்டும் உறுதியளித்தனர்.

நரேந்திர மோடியின் பதவியேற்பு விழா நேற்றுப் பிற்பகல் புதுடில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. நரேந்திர மோடியின் விசேட அழைப்பின் பேரில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்நிகழ்வில் இணைந்துகொண்டார்.

02▶

# வடமராட்சியில் சஜித்தின் நிகழ்வில் அங்கஜனும் பங்கேற்பு





(எஸ்.நிதர்ஷன்)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் 228 ஆவது கட்ட நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்துகொண்டார்.

சஜித்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் ‘பிரபஞ்சம்’ ஸ்மார்ட் வகுப்பறைகள் திட்டத்தின் 228 ஆவது கட்டத்தின் கீழ், யாழ். வடமராட்சி கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 11 இலட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை இன்று வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனும் கலந்துகொண்டார்.

# மோடி - ரணில் நேரில் உறுதி



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால், மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முயிசு, சீஷெல்ஸ் உப ஜனாதிபதி, மொரீஷியஸ் பிரதமர் மற்றும் பூட்டான் பிரதமர் உட்பட பிராந்திய அரச தலைவர்கள் பலர் இந்தப் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டதுடன் பிராந்திய அரச தலைவர்களில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உயர் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர், பிராந்திய தலைவர்களுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நரேந்திர மோடிக்கு அடுத்த இருக்கை வழங்கப்பட்டது.

இதேவேளை, பிரதமர் நரேந்திர மோடி ஏற்பாடு செய்திருந்த இராப் போசன விருந்தில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஏனைய அரச தலைவர்கள் கலந்து கொண்டனர்.

பதவியேற்பு விழாவில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரசன்னம் குறித்து இந்திய ஊடகங்கள் முக்கிய இடத்தை வழங்கியிருந்ததோடு, புதுடில்லியின் பிரதான சுற்றுவட்டங்களைச் சுற்றி இலங்கை ஜனாதிபதி மற்றும் இந்திய பிரதமரின் உருவம் பொறிக்கப்பட்ட பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஷேனுகா சேனவிரத்ன, அரச தகவல் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன மற்றும் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரும் இந்தப் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டனர்.







# யாழில் போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளைச் சந்தித்த சஜித்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சந்தித்துக் கலந்துரையாடியதுடன் நாடாளுமன்றத்தில் இந்த விடயம் தொடர்பாகப் பேசுவதாகவும் வாக்குறுதியளித்தார்.

வடக்கு மாகாண வேலையற்ற பட்டாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினார்.

"நான் அரசியல் நோக்கத்துடன் இங்கு சமூகம் தரவில்லை என்றபடியால், உங்களது பிரச்சினைகள் அனைத்தும் அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அரசின் பதில்களைப் பெற முயற்சிகளை எடுப்பேன்.

இந்த நாட்டில் சுமார் 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரையிலான வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி அரசில் இவர்களுக்காக மேற்கொள்ள முடியுமான தெளிவான மற்றும் முறையான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். இவர்களுக்கு அரச வேலைவாய்ப்பு அல்லது தொழில் முயற்சியாண்மையை தெரிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்போம். பத்து இலட்சம் புதிய தொழில் முனைவோரை உருவாக்குவதே ஐக்கிய மக்கள் சக்தி அரசின் முக்கிய நோக்கமாகும்.

அவ்வாறே, மாற்றுத்திறனாளி பட்டதாரிகளுக்கும் எந்தவித பாரபட்சமும் இன்றி கிராமத்துக்கும் நாட்டுக்கும் சேவையாற்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்போம். அவர்களின் திறமைக்கும் அவர்களின் அறிவுக்கும் உரிய இடம் வழங்கப்படும்." – என்று இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.














# வடமராட்சியில் சஜித்தின் நிகழ்வில் அங்கஜனும் பங்கேற்பு







# வவுனியாவில் சுவர் இடிந்து வீழ்ந்து இரண்டு மாதக் குழந்தை உயிரிழப்பு





(கே.வசந்தன்)

வவுனியா, ஓமந்தை, புதிய வேலர் சின்னக்குளத்தில் வீட்டின் சுவர் வீழ்ந்து இரண்டு மாதக் குழந்தை பலியாகியுள்ளது.

முல்லைத்தீவில் வசிக்கும் ச.சிந்துஜன் தனது மனைவி மற்றும் இரண்டு மாதக் குழந்தையுடன் வவுனியாவில் உள்ள தனது தங்கையின் வீட்டுக்குக் கடந்த 7ஆம் திகதி வந்துள்ளார்.

நிகழ்வொன்றுக்காக வருகை தந்திருந்த நிலையில் தங்கையின் தற்காலிக வீட்டில் தங்கியிருந்தபோது நேற்று மாலை சுமார் 5 மணியளவில் வீட்டில் உட்பகுயில் உள்ள கற்சுவர் குழந்தையின் மீது வீழ்ந்துள்ளது.

உடனடியாக வீட்டார் குழந்தையை வவுனியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதிலும் குழந்தை உயிரிழந்துள்ளது.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கேரளா கஞ்சாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்கள் கரவெட்டி – யாக்கரு விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து பருத்தித்துறை – வல்லிபுரம் காட்டுப் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது இரண்டு சாக்குகளில் அடைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 29 பொதிகள் அடங்கிய 60 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் மீட்கப்பட்ட கேரள கஞ்சாவுடன் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



# ரணிலின் தலைமையின் கீழ் இலங்கைப் பொருளாதாரத்தை மீளமைக்க முடிந்ததையிட்டு பங்களாதேஷ் பிரதமர் மகிழ்ச்சி

இலங்கையில் முன்னெடுக்கப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு பங்களாதேஷ் ஆதரவளிக்கும் என இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உறுதியளித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவிப் பிரமாண வைபவத்துக்காக புதுடில்லி சென்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சு இன்று காலை நடைபெற்றது. இதன்போதே பங்களாதேஷ் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டுறவு முறையின் அடிப்படையில் பங்களாதேஷில் செயற்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை ஆராய்ந்து இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்காக இலங்கை விவசாயத்துறை நிபுணர்கள் குழுவொன்றை பங்களாதேஷிற்கு அனுப்புவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இணக்கம் தெரிவித்தார்.

பங்களாதேஷிற்கும் இலங்கைக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்தும் இருநாட்டுத் தலைவர்களும் கலந்துரையாடியதோடு, இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நிறைவடைந்ததன் பின்னர் பங்களாதே/டன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

பங்களாதேஷின் தனியார் முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதாகவும் பங்களாதேஷ் பிரதமர், இலங்கை ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையில் பயணிகள் படகு சேவையை மேற்கொள்வது குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, பங்களாதேஷில் நடைபெறும் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்குமாறு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பங்களாதேஷ் பிரதமர் அழைப்பு விடுத்தார். மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் இலங்கையில் தேர்தல் நடைபெற இருப்பதால், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் மாநாட்டில் பங்குபற்றுவார்கள் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தேர்தலின் பின்னர் பங்களாதேஷுக்கு விஜயம் செய்வதாகவும் பங்களாதேஷ் பிரதமரிடம் இலங்கை ஜனாதிபதி உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இலங்கையின் பொருளாதாரத்தை மீளமைக்க முடிந்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

பொருளாதார மீட்சிக்கு பங்களாதேஷ் மற்றும் இந்தியாவிலிருந்து கிடைத்த ஆதரவை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்காக தனது நன்றியைத் தெரிவித்தார்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முடிகிறது தேனிலவு

கடைசியாக - 2020 இல் - நடைபெற்ற பொதுத் தேர்தலை அடுத்து, அரசியல் குப்பைக் கூடைக்குள் தூக்கிக் கடாசப்பட்டுக் கிடந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசியல் எதிர்காலத்தை - மறுபிறப்பை - வழங்கியது பொதுஜனப் பெரமுன கட்சி தான். விசேடமாக ராஜபக்ஷக்கள்தான்.

'அறகலய' வடிவத்தில் தமக்கு நெருப்பென வந்த மக்கள் எதிர்ப்பைத் தண்ணீரூற்றி அணைப்பதற்கு ராஜபக்ஷக்களுக்கு ரணில் விக்கிரமசிங்க தேவைப்பட்டார். அதனால் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் மீளெழுச்சிக்கு உரமூட்டி, உயிரூட்டினர் அவர்கள்.

அதன் மூலம் அரசியல் ரீதியில் தம்மை பலப்படுத்திக் கொண்டு விட்ட ரணில் விக்கிரமசிங்க இப்போது தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டார். ஏறிய ஏணியை தட்டி விழுத்தி விட்டு, வேறு மார்க்கத்தில் பயணிக்க அவர் தலைப்பட்டு விட்டார். ஒருவகையில் பார்த்தால் இது தீட்டிய மரத்தில் கூர் பார்க்கும் வேலைதான்.

பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் ரணில் விக்கிரமசிங்க வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதுதான் ராஜபக்ஷக்களின் எதிர்பார்ப்பு. ஆனால் அதற்கு இசைபவராக ரணில் விக்கிரமசிங்க இல்லை.

தமது சொந்தக் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியையும் கூடத் துறந்து, தாம் பொது வேட்பாளராகக் களம் இறங்குகிறார் என்றும், அதற்கு மொட்டுக் கட்சி வெளியிலிருந்து ஆதரவு தர வேண்டும் என்றும் ராஜபக்ஷக்களுக்கு - மொட்டுக் கட்சியின் தலைமைக்கு - ரணில் விக்கிரமசிங்க தெளிவான செய்தியை அனுப்பி உள்ளார் என்று தகவல்.

எனினும் இந்த அதிபர் தேர்தலில் தங்களின் மொட்டுச் சின்னத்தில் ஒரு வேட்பாளர் நிச்சயம் களமிறங்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கும் அக்கட்சியினருக்கு ரணில் விக்கிரமசிங்கவின் இந்தத் தகவல் எரிச்சலைத் தந்திருக்கின்றது.

மொட்டுக் கட்சியின் சார்பில் இந்தத் தேர்தலில் களமிறங்குவதற்கு தோதான வேட்பாளர் இல்லை என்ற பின்னடைவு நிலையை மனதில் வைத்துத்தான் இத்தகைய நகர்வை ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கின்றார் என்ற ஆதங்கம் - எரிச்சல் - விசனம் - அக்கட்சியின் பிரமுகர்களுக்கு எனத் தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பொருத்தமான வேட்பாளரைக் கட்சிக்குள் கண்டுபிடிக்க முடியாவிட்டால், தேர்தலில் போட்டியிடத் தாமே தயார் என நாமல் ராஜபக்ஷ எம்.பி. கட்சியின் செயற்குழுவிற்கு அறிவித்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த 07 ஆம் திகதி சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்குழு மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கூடிய போதே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இது தொடர்பில் கட்சியில் உத்தியோகபூர்வ உடன்பாடேதும் எட்டப்படவில்லை என்றும், ஆயினும் நாமல் ராஜபக்ஷவின் கருத்தை எவரும் அங்கு எதிர்க்கவில்லை என்றும் கூறப்பட்டது.

நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் தாமே போட்டியிடத் தயார் என்று கட்சிக் கூட்டத்தில் அறிவித்தாலும் அது சாத்தியமாவதற்கு வாய்ப்பில்லை என்பது ஊகிக்கத்தக்கதே.

தனது மகனும், அரசியல் வாரிசுமான நாமல் ராஜபக்ஷவை இந்த இளவயதில், வெல்ல முடியாத ஒரு ஜனாதிபதி தேர்தலில் களம் இறங்க அனுமதித்து, தோற்கடிக்க இடம் அளித்து, அவரின் அரசியல் எதிர்காலத்தைச் சூனியமாக்க நிச்சயம் மஹிந்த ராஜபக்ஷ இணங்க மாட்டார் என்பது உறுதியானதுதான்.

எனினும், ஆளில்லாவிட்டால் நாமல் ராஜபக்ஷ தாமே நேரடியாக வேட்பாளராகக் களமிறங்கத் தயார் என்று அறிவிக்கும் நிலையில் இந்தத் தேர்தலில் தங்களது மொட்டுச் சின்னத்தில் ஒரு வேட்பாளரை களமிறக்கும் உறுதியில் அக்கட்சி உள்ளது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதை தவிர்க்கும் முடிவில் ரணில் விக்கிரமசிங்கவும் தமது மொட்டுச் சின்னத்தில் ஒரு வேட்பாளரை களம் இறக்கும் உறுதியில் பொதுஜன பெரமுனவும் உறுதியாக இருப்பதால், இரண்டு வருடங்களுக்கு முன்னர் 2022 ஜூனில் ரணில் விக்ரமசிங்க பிரதமராக பொறுப்பேற்றுமையை அடுத்து அவருக் கும் மொட்டு கட்சியினருக்கும் இடையில் ஆரம்பமான தேனிலவு அரசியல் பயணம் முடிவடையும் கட்டத்தை நெருங்கி விட்டது என்பது உறுதியாகிவிட்டது.






### எருவில் கண்ணகி மகா வித்தியாலய பவளவிழா

# கலை கலாசார அம்சங்களுடன் பவள விழா வாகனப் பேரணி!

(பழுவூரான்)

பட்டிருப்புக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட எருவில் கண்ணகி மகா வித்தியாலயத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பவளவிழாவை முன்னிட்டு மாபெரும் வாகன பேரணி இடம்பெற்றது.

கண்ணகி மகா வித்தியாலயத்தின் அதிபர் சிவநேசராசா தீபதர்சன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வின் முதல் நிகழ்வாக பழைய மாணவர்களால் நிர்மானிக்கப்பட்ட பவள விழா நினைவுத் தூபி வித்தியாலயத்தின் பிரதான வாயிலுக்கு அருகாமையில் பாடசாலை 1949 ஆண்டு முதல் முதலாக நிர்மானிக்கப்பட்ட போது முதல் மாணவியாக சேர்த்துக் கொள்ளப்பட்ட பழைய மாணவியால் திறந்து வைக்கப்பட்டது.




அதனைத் தொடர்ந்து சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பழைய மாணவர்கள் மற்றும் மாணவிகளின் பங்கேற்புடன் கலை, கலாசார பாரம்பரிய அம்சங்களைப் பறைசாற்றும் வண்ணமாக மாபெரும் வாகனப் பேரணி நடத்தப்பட்டது.

பேரணி களுவாஞ்சிகுடி – கல்முனை பிரதான வீதி வழியாகச் சென்று மகிளூரைச் சென்றடைந்து தொடர்ந்து குறுமண்வெளி வீதி ஊடாக மீண்டும் பாடசாலையை வந்தடைந்ததும் பவள விழா வாகனப் பேரணி நிறைவுக்கு வந்திருந்தது.

பவளவிழாப் பேரணியில் கலை, கலாசார பாரம்பரிய அம்சங்களுடன் மாணவர்களது நடனம், பொம்மலாட்டம், காவடியாட்டம் போன்றவையும் முன்னெடுக்கப்பட்டன. இந்தப் பேரணியில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் எனச் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றிருந்தனர்.ஆயிரக் கணக்கான பொது மக்கள் பேரணியை காண்பதற்காக வீதிகளின் இருமருங்கிலும் காத்திருந்து பார்வையிட்டனர்.

















# சுற்றுச் சூழல் தூய்மைப்படுத்தல் செயற்பாடு


**(த.சுபேசன்)**

அனைத்துலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கடந்த புதன்கிழமை லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு நகரப் பகுதியில் சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்தல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இதில் முல்லைத்தீவு மாவட்ட மகளிர் குழுக்கள் பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.








# கொடிகாமத்தில் இரத்ததான முகாம்

**(த.சுபேசன்)**

மனிதநேயத்தை வலியுறுத்தும் நோக்கில் வேள்ட் விசன் நிறுவன அனுசரணையுடன் இதம் நிறுவனமானது இன்பக்ற் பிளஸ் கழக சிறார்களுடன் இணைந்து நடத்திய மாபெரும் தன்னார்வ இரத்ததான முகாம் நேற்று (09) ஞாயிற்றுக்கிழமை காலை கொடி காமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தனர்.

# வவுனியா தமிழ் கலவன் பாடசாலையில் 7 பேர் பல்கலைக் கழகத்துக்குத் தகுதி

வெளியாகியுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, வவுனியா – இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் ஒரு மாணவரும் ஒரு மாணவியும் 3 பாடங்களிலும் அதி சிறப்புச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் அஜந்தன் தனுசன் என்ற மாணவரும், கலைப் பிரிவில் சபீனா சிவகுமார் என்ற மாணவியுமே இவ்வாறு 3ஏ அதி சிறப்புச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் பிரதீபன் மதுராங்கன் (ஏபிசி), ஜெய்கீசன் சஞ்சுதன் (ஏபிசி), டிலானி கேதீஸ்வரன் (பி2சி) மற்றும் கலைப் பிரிவில் ஜதுஷா மோகன்ராஜ் (ஏ2பி), சங்கவி சிவகணேஷ் (பி2சி) ஆகிய மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் இருந்து இந்த முறை வர்த்தகப் பிரிவிலிருந்து 5 பேரும், கலைப் பிரிவிலிருந்து 14 பேருமாக மொத்தம் 19 பேர் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில், இதில் 7 பேர் பல்கலைக் கழக நுழைவுக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாடசாலையில் இருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள ஏழு மாணவர்களுக்கும் அதிபர் மாணிக்கம் அரிபூரணநாதன் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.





# தமிழர் புலப்பெயர்வு என்ற நூலை பெற்றார் செந்தில் தொண்டமான்!

(ஹஸ்பர்)

சர்வதேச தமிழ் மரபு அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் கே.சுபாஷினி , கிழக்கு மாகாண ஆளுனரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானை ஜேர்மனி பிராங்பேர்ட் நகரில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, பல நூற்றாண்டுகளுக்கு முன் உலக அளவில் தமிழ் விரிவாக்கத்தின் வரலாறு தொடர்பான "தமிழர் புலப்பெயர்வு" நூலை டாக்டர் கே.சுபாஷினி ஆளுநருக்கு வழங்கினார்.

இலங்கையில் பெருந்தோட்ட சமூகத்தின் 200 ஆவது வருடத்தின் முதல் நினைவு முத்திரை இதன்போது ஆளுநரால் டாக்டர் கே.சுபாஷினியிடம் வழங்கப்பட்டது.ஜேர்மனி பிராங்பேர்ட் நகரில் உள்ள புலம்பெயர் தமிழ் மக்களையும் ஆளுநர் சந்தித்துக் கலந்துரையாடல் மேற்கொண்டார்.






# ஜனாதிபதி ரணிலை பலப்படுத்துவதற்கான தென்பகுதியின் பொது வேட்பாளர் திட்டம்!

## அதனை அமுல்படுத்த தமிழ் தரப்பும் பொது அமைப்புக்களும் என்கிறார் தர்மலிங்கம் சுரேஸ்

(கனகராசா சரவணன்)

தென்பகுதியில் உள்ள சிங்கள கட்சிகள் ஜனாதிபதி ரணிலை பலப் படுத்துவதற்காவும் ஆதரவை அதிகரிப் பதற்காகவும் ரணிலால் போடப்பட்டதே பொது வேட்பாளர் திட்டம். அதனை தமிழ் தலைமைகள் பொது அமைப்புக்கள் அமுல்படுத்துகின்றன.

எனவே பொது வேட்பாளருக்கு வாக் களிக்க போவதாக இருந்தால் 75 வரு டமாக நிராகரித்துவந்த ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்ட தாகும். அந்த யாப்பும் சர்வதேசத்தில் ஏற்றுக் கொண்டதாகிவிடும்.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன் னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை (9) பொது வேட்பாளர் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வரு மாறு,

ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு தொடர்பாக மிகத் தெளி வாக ஏற்கனவே அறிவித்தோம். இலங்கை அரசின் தலைவர்களிடம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. தமிழர்களைக் கொன்று குவித்த ஒவ் வொரு தலைவர்களும் தமிழ் மக்க ளுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றி அடக்கி ஒடுக்கி வந் தார்கள்.

இப்போது நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்குப் பெரியளவில் திருப்தி இல்லாத நிலை காணப்படுகின்றது. இந்த தேர்தலை ஒரு பொருட்டாகக் கருத்தில் கொள்ளவில்லை.

தமிழ் மக்கள் மீது இடம்பெற்ற இன ழிப்பை நீண்ட காலமாகச் சர்வதேசத் திடம் கொண்டு சென்று மக்கள் போராடி வருகின்றனர். யுத்தம் மௌனித்த 2009 இற்குப் பின்னர் தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்குப் பொய்யான வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

தமிழ் மக்கள் ஏகோபித்து ஒருமித்து வாக்குகளை கொள்ளையடித்துவிட்டு சர்வதேச அரங்கில் இனப்படுகொலை செய்த இராணுவத்தினரையும் சிங்கள ஆட்சியாளர்களையும் தமிழ் மக்களுக்கு துரோகங்கள் செய்த அத்தனை கும் பல்களையும் பாதுகாத்ததே தவிர எந்த விதமான ஆக்க பூர்வமான நடவடிக் கையும் எடுக்கவில்லை.

தமிழ் மக்களைக் குழப்புவதற்காகப் பொது வேட்பாளர் என்ற நாடகம் அரங் கேறிக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உடைத்த மிக முக்கியமானவர் தற்போ தைய ஜனாதிபதி.

இந்தியா, அமெரிக்கா மற்றும் சர்வே தச நாடுகள் தமது பூலோக அரசியல் ரீதியாக இருப்பை தக்கவைப்பதற்காக இந்த நாட்டின் தேவையாக ரணில் இருக்கின்றார். இதற்கு பொது வேட்பா ளர் திட்டம். அதற்கு இந்தியா அமெரிக்க பின்னணியில் இருக்கின்றது. அதில் மாற்றுக் கருத்து இல்லை.

தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்கான போர் முடிந்து 15 ஆண்டுகள் கழிந்துள்ளன. இது வரைக்கும் தமிழ் மக்களின் ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெற்ற எந்தவொரு தமிழ்த் தரப்புக்களோ – அமைப்புக்களோ தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை – தேசத்தை அங்கீகரிப்பதற்கு கூட்டாக இருந்து செயற்படவில்லை.

மாற்றாக தமிழ் மக்கள் எதிர்த்துவந்த ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை செயற்படுத்து முற்பட்டபோது, அதனை தமிழ் தேசிய மக்கள் முன்னணி மக்களுடன் இணைந்து போராட்டம் செய்யும் போது தான் அவர்கள் வழிக்கு வந்தனர். ஆனால் இன்று இந்தப் பொது வேட்பாளர் விடயத்தில் அனை வரும் ஒன்றாக நிற்கின்றனர்.

விடுதலைப் புலிகள் இருந்த காலத் தில் கூட பொது வேட்பாளர் விடயம் கதைக்கப்படவில்லை. அவர்கள் எடுத்த முடிவு, பகிஸ்கரிப்பு, அவர்கள் சிங்கள தலைவர்களிடம் நம்பிக்கை இல்லை என தெரிவித்தனர். மக்கள் அந்த முடிவை எடுத்தனர்.

அதனடிப்படையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பகிஷ்கரிப்பில் உறுதியாக நிற்கின்றது. மக்கள் இன்று வாக்களிப்பதற்கு அர்வம் இல்லாத நிலை காணப்படுகின்றுது. ஆகவே சர்வதேசத்துக்குக் குறைந்தபட்சம் நிராகரிப்பு விடயத்தை எடுத்து காட்ட வேண்டும். அதன் அடிப்படையில் தமிழர்கள் இந்தத் தேர்தலைப் பகிஸஷ் ரிக்க வேண்டும் என்பதில் எள்ளவும் பிசகக்கூடாது. அப்போதுதான் உலகம் எங்களைத் திரும்பிப் பார்க்கும். தமிழர்கள், சிங்களத் தலைவர்களை விரும்பவில்லை. அதனால் வாக்களிக்க விரும்பவில்லை என உலகத்துக்கு எடுத்து சொல்லலாம்.

யாழ்ப்பாணத்தில் பொது வேட்பாள் தொடர்பாக அதிகளவு பணத்தை கொடுத்து ஹோட்டல்களில் கூட்டத்தை போடுகின்றனர் இதற்கு பின்னணி யார்? பணச் செலவுகள் யார்?.

பொது வேட்பாளர் விடயம் தென் பகுதியில் ரணிலுக்கு ஆதரவு தரும். அதிகரிக்கும். அதனை அதிகரிப் பதற்கான ஒரு முயற்சியாகும். இதில் மாற்று கருத்து இல்லை.

எனவே இந்தத் தீவில் தமிழர்களு டைய சுயநிர்ணய உரிமை, தேசம் – இனத்தின் இருப்பு இருக்க வேண்டுமாக இருந்தால் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு அகற்றப்பட்டு சமஷ்டிக் கட்டமைப்பாக கொண்டுவரப்பட வேண டும். அதற்கான வேலைத் திட்டங்களைச் செய்ய வேண்டுமே தவிர இந்தத் தேர்தலை ஏற்றுக்கொண்டு சிங்கள தலைமைகளை வெல்ல வைப்பதற்கு உடந்தையாக இருக்க கூடாது.– என்றார்.



# சமூகமயமாக்கலும் பாடசாலை இணைந்த கலைத் திட்டமும்...!

கல்வி என்பது சுய செயற்பாடு எனும் கூற்றுக்கு இணங்கப் பரீட்சையை மாத்திரம் மையமாகக் கொண்டு மாணவர்களுக்குக் கல்வி வழங்கப்படக் கூடாது என்பதற்கு இணங்க அவர்களுடைய சமநிலை ஆளுமையை கருத்தில் கொண்டு மாண வர்களுக்கு இணைப்பாடவிதான செயற்பாடுகளின் மூலமாக அவருடைய திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான பல்வேறு நிகழ்வுகள் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

எடுத்துக்காட்டாக பாடசாலைத் தமிழ் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி என்பன மாணவர் களின் அறிவை மேம்படுத்துகின்றன. போட்டி போட் டுச் செயற்படும் விதத்தை அறிந்து கொள்ள, சமூ கத்தில் பிற மாணவர்களுடன் சேர்ந்து பழகும் வாய்ப்பு பெற, நற்குணங்களை வளர்த்துக்கொள்ள, தோல்வியை ஏற்றுக் கொள்ள, வெற்றி பெற்றவர் களைப் பாராட்ட எனச் சமூக மயமாக்கல் பண்பு வளர உதவுகின்றன.

இணைந்த கலைத்திட்டச் செயல்முறைகளாகக் கல்விச் சுற்றுலா, விளையாட்டுப் போட்டி, முதலுதவி, சாரணியம், மாணவர் மன்றம், விழாக்கள், பெருங் காட்சி மற்றும் கண்காட்சி பல்வேறு மன்றங்கள் அல்லது கழகங்களின் செயற்;பாடுகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இவ்வாறு பாடசாலைகளில் இடம்பெறும் இணைப் பாடவிதான செயற்பாடுகளின் மூலமாக மாணவர்கள் எவ்வாறு சமூகமயமாக்கப்படுகின்றார்கள் என்பதைப் பின்வருமாறு ஆராயலாம்.

இதன்படி கல்விச் சுற்றுலாவை எடுத்துக் கொள் வோமானால் பாட நூல்களில் அல்லது ஆசிரியர் கை நூல்களில் காணப்படும் இடங்கள் அல்லது பிரசித்தி பெற்ற இடங்களை நேரில் சென்று பார்ப் பதற்கு ஒரு வாய்ப்பாக அமைகின்றது. விழுமியப் பண்புகளை வளர்த்துக் கொள்ளவும் ஒரு மேடையாக இந்தச் செயல் முறையானது காணப்படுகின்றது.

அதாவது கல்விச் சுற்றுலாக்களின் மூலமாகத் தேவாலயங்கள், விகாரைகள், கோயில்கள், பள்ளி வாசல்கள் போன்ற பல்வேறு மத ஸ்தலங்களுக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதால் அங்கு எவ்வாறான விழுமிய பண்புகள் காணப்படுகின்றன என்பது தொடர்பாக அறிந்து, பல்வேறு மதம் தொடர் பான அறிவையும் மாணவர்கள் பெற்றுக் கொள் வதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

இதன் மூலமாக சமூகமயமாக்கம் மாணவர்கள் மத்தியில் ஏற்படக் கூடியதாக உள்ளது எனலாம்.

மேலும் விளையாட்டுப் போட்டிகள் மூலமாக மாணவர்கள் ஏனைய பாடசாலை மாணவர்களோடு போட்டியிடுவதற்கான வாய்ப்புகளும் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகளும் ஏற்படுவதால் ஏனைய பாடசாலைகள் தொடர்பான சட்ட திட்டங்கள், விழுமியங்கள், விதிகள், நடைமுறைகள் என பல வேறு விடயங்களையும் அம்மாணவர்கள் தொடர்பு கொள்வதன் மூலமாக அறிந்து கொள்ளக் கூடிய வர்களாக உள்ளனர். அதே நேரம் ஏனைய பாடசாலை மாணவர்களுடன் நட்புறவும் மாணவர்களுக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே விளையாட்டுப் போட்டிகள் மூலமாகச் சிறந்த சமூகமயமாக்கல் தன்மையை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

சாரணிய இயக்க செயற்பாடுகளின் மூலமாக சாரணியர் பாடல், சர்வதேச சமய வழிபாடு, உடற் பயிற்சி, விளையாட்டு போட்டி, முதலுதவி சிகிச்சை, மனக்கட்டுப்பாடு, ஒழுக்க பண்பு, சேவை மனப் பான்மையை வளர்த்தல், தலைமை பண்பு, பிறருக்கு உதவுதல், கூடாரம் அமைத்தல், தீயணைப்பு போன்ற பல்வேறு செயல்பாடுகள் விருத்தி பெற சாரணிய இயக்கம் உதவுகின்றது. ஏனைய பாடசாலை மாண வர்களோடு தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகளை சாரணிய இயக்கம் ஏற்படுத்திக் கொடுப்பதால் மாணவர்கள் மத்தியில் சமூகமயமாகும் தன்மை விருத்தி அடைகின்றது.

பாடசாலைகளில் ஒளிவிழா, சரஸ்வதி பூஜை, மீலாத்து நபி விழா போன்ற பல்வேறு விழாக்கள் இடம்பெறுவதால் ஒவ்வொரு மதத்தையும் சார்ந்த விடயங்கள் கலை, கலாச்சார அம்சங்கள், பண்பாடுகள் தொடர்பான விடயங்களை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு மாணவர்கள் மத்தியில் ஏற்படுகின்றது.

அத்தோடு மாணவர்கள் ஏனைய மதத்தவர்க ளுடைய விழாக்களில் இணைந்து நிகழ்வுகளில் பங்குபெற்றுதல், அவர்களுடைய விழாக்களுக்கான உதவி வேலைப்பாடுகளை செய்தல் போன்றவற்றின் மூலமாக சமூக மயமாக்கல் மாணவர்கள் மத்தியில் ஏற்படக் கூடியதாக உள்ளது. இதற்காக இணைப் பாடவிதான செயல்பாடுகளாகக் காணப்படும் பாட சாலை மட்டத்தில் இடம்பெறும் இவ்வாறான விழாக் கள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மாணவர் மன்ற செயற்பாடுகள் மூலமாகப் பாடசாலைகளில் இடம்பெறும் தமிழ் இலக்கிய கலாமன்றம், சமய சமூகம் சார்ந்த மன்றங்கள் நடத்தப்படுவதால் மாணவர்கள் பல்வேறு நிகழ்வுக ளில் ஆர்வத்துடன் பங்கு பற்றுவதோடு அவர்களுடைய திறமைகளையும் வெளிக்காட்டுவதற்கான களமாக அமைகின்றது.

இதன் மூலமாகச் சமூகத்தின் மத்தியில் தங்க ளுடைய திறமைகளை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைகின்றது. இதன் மூலமாக ஆசிரியர் மாணவர் தொடர்பு, மாணவர் மாணவர் தொடர்பு என்பன சிறந்த முறையில் ஏற்பட்டு மாணவர்கள் மத்தியில் சமூகமயமாக்கல் தன்மையானது மேலும் விருத்தி அடைவதற்கு மாணவர்மன்ற செயல்பாடுகள் முக்கி

தொடர்ச்சி▼

# சமூகமயமாக்கலும் பாடசாலை இணைந்த கலைத் திட்டமும்...!

தொடர்ச்சி▲

யமானதாக அமையும்.

கல்வி என்பது வாழ்கைக்கான பொருத்தப்பாடு என்பதற்கு இணங்க மாணவர்கள் மத்தியில் தன்னம்பிக்கை, சுயகௌரவம், சுயதிறன் விருத்தி என்பவை ஏற்படுவதோடு தலைமைத்துவ பண்பு, பிறருக்கு உதவும் மனப்பான்மை, குழு முயற்சி, கூட்டுறவுப் பண்பு, நம்பிக்கை, தேசிய ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடு, தமது சுற்றாடலை பேண வேண்டும் என்ற உணர்வு போன்ற சமூகமயமாக்கல் தன்மைகள் மாணவர்கள் மத்தியில் ஏற்படக்கூடியதாக அமைகின்றது. அவ்விதத்திலேயே இணைந்த கலைத் திட்டமானது பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

அந்த விதத்தில் விளையாட்டுப் போட்டிகளாக இருக்கட்டும், சுற்றுலாவாக இருக்கட்டும், சாரணியம், விழாக்கள், கழகங்கள் போன்றவற்றில் மாணவர்கள் பங்கு கொள்வதால் தங்களுடைய பிள்ளைகளின் கல்விச் செயல்பாடுகள் சீரழிய வாய்ப்பு உள்ளது என பெற்றோர்கள் எண்ணுகின்றனர். இதன் மூலமாக மாணவர்கள் சமூகமயமாகும் தன்மையானது குன்றி குறுகிய வட்டத்துக்குள்ளேயே மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக உருவாக்கப்படுகின்றனர்.

எனவே இணைந்த கலைத்திட்டம் தொடர்பான தெளிவான அறிவைப் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் சரியான விதத்தில் வழங்குதல் வேண்டும்.

ஆனால் மாணவர்கள் இதில் பங்கு கொள்ளும் விதமானது மிகவும் குறைவாகவே உள்ளது. இதன் மூலமாக மாணவர்களுக்கு தோல்வியை கண்டு துவண்டு விடும் பண்பு, மற்றவர்களிடம் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதில் உள்ள அச்சம், பயம், கூச்சம் போன்ற விடயங்களின் மூலமாக பல்வேறு சிக்கல்களுக்கு மாணவர்கள் உள்ளாக நேரிடக் கூடியதாக உள்ளது.

சிறந்த சமூகமயமாக்கல் தன்மை மாணவர்கள் மத்தியில் இல்லாத காரணத்தால் இன்றைய கால கட்டங்களில் பல மாணவர்கள் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு உள்ளனர்.

இவ்வாறான நிலைமைகளில் இருந்து மாணவர்களை விடுவித்து ஒரு சுமுகமான வாழ்க்கையை வாழ்வதற்கு சமூக மயமாக்கல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

காராளசிங்கம் ஷயந்தினி,
கல்வியியல் சிறப்புக்கற்கை மாணவி,
கல்வி பிள்ளை நலத்துறை,
நான்காம் வருடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,



# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு புதிய அத்தியட்சகர் நியமனம்



(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் த.காண்டீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றிய வைத்தியர் எஸ். குமாரவேல் அண்மையில் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை புதிய அத்தியட்சகராக இவர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.





# சர்வதேச புகைத்தல், போதை எதிர்ப்பு தினத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு

(பாறுக் ஷிஹான்)

2024 ஆம் ஆண்டின் சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு 'புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் வலுவான தேசத்தை கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் விழிப்புணர்வு கருத்தரங்கு கல்முனை பிரதேச செயலக மண்டபத்தில் இன்று (10) நடைபெற்றது.

தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக மகா சங்க சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் நைனா முஹம்மது நௌசாட் பிரதான வளவாளராக கலந்து கொண்டு மக்களுக்கு சிறந்த விளக்கங்களை மக்களுக்கு வழங்கியிருந்தார்.

அத்துடன் கல்முனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மூன்று சமுர்த்தி வங்கி வலயங்களில் கல்முனை சமுர்த்தி வங்கி வலயம் கடந்த 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு கொடி வாரத்தில் அதிகபடியான கொடி விற்பனை செய்து முதலாம் இடத்தை பெற்று கொண்டவர்கள் உள்ளிட்ட வங்கி முகாமையாளர் , பிரதி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.





# தொகுப்பு நூல் வெளியீடு

(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் செ. பேரின்பராசாவால் தொகுக்கப்பட்ட பாவாணர் அக்கரைப்பாக்கியனின் வாழ்வியல் பயணம் எனும் நூல் வெளியீட்டு விழா கோளாவில் பெருநாவலர் வித்தியாலய மண்டபத்தில் சனிக்கிழமை (08) இடம்பெற்றது.

அக்கரைப்பற்று தமிழ்சங்கத்தின் தலைவரும் ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளருமான வா.குணாளன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக நாடாளுமன்ற முன்னை நாள் உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் கலந்து கொண்டார்.



விசேட அதிதியாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அனுசியா சேனாதிராஜா, வைத்தியர் சித்திரா தேவராஜன், ஓய்வு நிலை அதிபர் க.கோபாலபிள்ளை தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் க.இரத்தினவேல் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தை ஆசிரியை சாமந்தி டினேஸ் வழங்க வரவேற்புரையைத் தமிழ்ச்சங்கச் செயலாளர் வி.சிவன்செயலும் தலைமையுரையைத் தலைவர் வா.குணாளனும் வழங்கினர்.

நூல் அறிமுகத்தை பிரதேச செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இணைந்து செய்து வைத்ததுடன் நூலாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியனிடம் இருந்து நூலின் பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து அதிதிகளால் முதல் நூல் விரிவுரையாளர் கலாநிதி ச. புவனேந்திரன் சார்பாக அவரது சகோதரர் ஆசிரியர் பிரதீபனுக்கு வழங்கப்பட்டது.

நூல் அறிமுக உரையைத் திருக்கோவில் ஆசிரியர் வளநிலைய முகாமையாளரும் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவருமான ந.சுதாகரன் வழங்க நூல் நயவுரையை ஓய்வு நிலை அதிபர் க.தவராசா வழங்கினர்.



# விவசாயிகளுக்கு நிதி விடுவிக்கும் கோப்பில் மோடி முதலாவது ஒப்பம்

இந்தியாவின் பிரதமராக மூன்றாவது தடவையாக நேற்றுப் பதவியேற்ற நிலையில், இன்று தனது அலுவலகத்திற்கு சென்ற நரேந்திர மோடி, முறைப்படி தனது பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பிரதமராக பதவியேற்றதும் முதல் கையெழுத்தாக விவசாயிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் கோப்பில் அவர் ஒப்பமிட்டார்.

பிரதான் மந்திரி கிசான் நிதியின் 17 ஆவது தவணையை விடுவிப்பதற்கான கோப்பில் மோடி கையெழுத்திட்டார்.

நாடு முழுவதும் உள்ள சுமார் 9.3 கோடி விவசாயிகளுக்கு மொத்தம் 20 ஆயிரம் கோடி ரூபா வழங்குவதற்காக மோடி கையெழுத்திட்டார். பின்னர் பேசிய பிரதமர் மோடி, “புதிய அரசின் முதல் முடிவு விவசாயிகளின்



நலனுக்கான அரசின் அர்ப்பணிப்பை காட்டுகிறது. விவசாயிகளின் வாழ்வுக்காக எங்கள் அரசு முழு அர்ப்பணிப்புடன் உள்ளது” என்றார்.

# நேற்று ஏற்ற அமைச்சர் பதவியை இன்று வேண்டாம் என்கின்றார்!

திருவனந்தபுரம்,ஜூன்10

மத்திய மந்திரி பதவியில் தனக்கு விருப்பம் இல்லை எனவும், அந்த பொறுப்பில் இருந்து தன்னை விடுவிப்பார்கள் எனத் தாம் நம்புகிறார் எனவும் கூறியுள்ளார்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில், கேரளாவில் மொத்தமுள்ள 20 தொகுதிகளில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, 18 இடங்களிலும் ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி மற்றும் பாரதீய ஜனதா தலா ஒரு தொகுதியிலும் வென்றன.

திருச்சூர் தொகுதியில் போட்டியிட்ட பா.ஜனதா வேட்பாளரும், நடிகருமான சுரேஷ் கோபி, 74,686 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதன் மூலமாக கேரளாவில் தனது முதல் வெற்றிக் கணக்கை பா.ஜனதா தொடங்கியது. சுரேஷ் கோபியை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட மூத்த தலைவர் கே. முரளீதரன் மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டார்.

கேரளாவின் முதல் பா.ஜனதா எம்.பியான சுரேஷ் கோபிக்கு மத்திய



இணை மந்திரி பொறுப்பு வழங்கப்பட்டது. நேற்று நடைபெற்ற பதவியேற்பு விழாவில் சுரேஷ் கோபி அமைச்சராக பொறுப்பேற்றார். இந்த நிலையில், தனக்கு மத்திய மந்திரி பொறுப்பு வேண்டாம் என இன்று கூறியுள்ளார்.

மலையாள தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில் சுரேஷ் கோபி “நான் எம்.பியாகவே பணி செய்ய விரும்புகிறேன். எனக்கு மந்திரி பதவி வேண்டாம் என்றுதான் கூறி வந்தேன். ஆனால் கட்சி மேலிடம் கேட்டுக்கொண்டதால் நேற்று பொறுப்பேற்றுக்கொண்டேன். எனக்கு மந்திரி பதவியில் நாட்டம் இல்லை. எனவே, என்னை பொறுப்பில் இருந்து விடுவிப்பார்கள் என நம்புகிறேன்” - என்றார்.

# தமிழகத்தில் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் ஜூலை 10

சென்னை,ஜூன்10

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி தி.மு.கழக எம்.எல்.ஏ. புகழேந்தி கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி மரணம் அடைந்தார். எனவே அந்த தொகுதிக்கு நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் போதே இடைத்தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு ஜூலை 10 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று இந்திய தேர்தல்




ஆணையம் அறிவித்துள்ளது. இந்த தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வருகின்ற 14ஆம் திகதி தொடங்குகிறது. வேட்புமனு தாக்கல் செய்ய 21ஆம் திகதி கடைசி நாள் ஆகும்.

இடைத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூலை 13 ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. விக்கிரவாண்டி உட்பட நாடுமுழுவதும் மொத்தம் 13 பேரவை தொகுதிகளில் ஜூலை 10-ஆம் திகதி இடைத்தேர்தல் நடக்கிறது. இடைத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதையடுத்து விக்கிரவாண்டி தொகுதியில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

# நான்கு பணயக் கைதிகளை மீட்பதற்காக 274 பாலஸ்தீனர்களைக் கொன்ற இஸ்ரேல்

காசா,ஜூன் 10

காசாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினரின் ஒக்டோபர்-7 தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கவும், அவர்கள் வசம் உள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளை மீட்கவும் காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. பணயக் கைதிகளில் பாதிக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ள நிலையில், மற்றவர்களை மீட்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், மத்திய காசாவின் நூசிரத் அகதிகள் முகாம் பகுதியில் நேற்று ஒரே சமயத்தில் இரண்டு குடியிருப்பு கட்டடங்களில் இஸ்ரேல் படையினர் அதிரடி தாக்குதல் நடத்தினர். மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் நடந்த இந்த தாக்குதலின் முடிவில், 4 பணயக் கைதிகளை இஸ்ரேல் படையினர் உயிருடன் மீட்டனர்.

மீட்கப்பட்ட நோவா அர்கமாணி (25), அல்மோக் (21), ஆன்ட்ரே கோஸ்லோவ் (27), ஷ்லோமி (40) ஆகிய நான்கு பேரும் நாடு திரும்பியமையை இஸ்ரேலியர்கள் கொண்டாடி வருகின்றனர்.

இன்னும் ஏராளமான பணயக்கைதிகள் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் அல்லது ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள சுரங்கப்பாதைக்குள் அடைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. அவர்களை மீட்பதற்கு இதுபோன்ற நடவடிக்கைகள் மிகவும் சிக்கலானவையாகவும் ஆபத்தானவையாகவும் உள்ளன. பெப்ரவரி மாதம் இதே போன்ற ஒரு நடவடிக்கையில் 74 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட நிலையில் 2 பணயக்கைதிகளை மீட்டனர்.



இந்நிலையில், 4 பணயக் கைதிகளை மீட்பதற்காக பகல் நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 274 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் எனவும், சுமார் 700 பேர் காயமடைந்தனர் எனவும் காசா சுகாதார அமைச்சகம் இன்று தெரிவித்துள்ளது. இறந்தவர்களில் எத்தனை பேர் பெண்கள், எத்தனை பேர் குழந்தைகள் என்பன போன்ற விவரங்களைத் தெரிவிக்கவில்லை.

காயமடைந்தவர்கள் அருளில் உள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். தாக்குதலுக்குப் பிறகு அருகிலுள்ள டெய்ர் அல்-பலாஹ் நகரில் உள்ள அல்-அக்சா தியாகிகள் மருத்துவமனையில் பலர் சிகிச்சை பெறுகின்றமையொ பார்த்தார் என அசோசியேட்டட் பிரஸ் செய்தியாளர்கள் கூறி உள்ளனர்.

இஸ்ரேல் படைகளின் தாக்குதலால் காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஏற்கனவே வந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க போராடிக்கொண்டிருக்கும் நிலையில், மேலும் நோயாளிகள் வந்தமையால் நிலைமை மோசமாகியிருப்பதாக மருத்துவர்கள் கூறி உள்ளனர்.

பணயக் கைதிகளின் மீட்புப் பணியின்போது இஸ்ரேல் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் மிகப்பெரிய அளவில் பதிலடி கொடுக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச விண்வெளி மையத்திற்குத் தன்னுடன் மீன் குழம்பையும் எடுத்துச் சென்தாராம் சுனிதா

வொஷிங்டன்,ஜூன்10

இந்திய வம்சாவளியை சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், 3 ஆவது முறையாக விண்வெளிக்குச் சென்றுள்ளார்.

அமெரிக்காவில் வசித்து வரும் இந்திய வம்சாவளியை சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ். 58 வயதான சுனிதா ஏற்கனவே 2 முறை விண்வெளிக்கு பயணம் செய்துள்ளார்.

இந்த நிலையில் சுனிதா வில்லியம்ஸ் தற்போது 3 ஆவது முறையாக விண்வெளிக்கு - சர்வதேச விண்வெளி மையத்திற்கு - சென்றுள்ள சுனிதா, தன்னுடன் விநாயகர் சிலை மற்றும் சூடான மீன் குழம்பை கொண்டு சென்றுள்ளார் எனப் பிரபல செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. இது தனது வீட்டில் இருப்பதுபோன்ற உணர்வை தரும் என அவர் கூறியுள்ளார். கடந்தமுறை அவர் சமோசாவை எடுத்துச் சென்றிருந்தார்.



அமெரிக்க கப்பல் படை விமானியான இவர், கடந்த 2006 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் விண்வெளிக்குச் சென்றிருந்தார். இதுவரை 322 நாள்களை அவர் விண்ணில் கழித்திருக்கிறார். அதுமட்டுமின்றி விண்ணில் நெடுநேரம் நடைபயின்ற முதல் பெண் என்ற சாதனைக்கும் சொந்தக்காரர். 7 முறை விண்வெளியில் நடைபயின்ற சுனிதா மொத்தம் 50 மணி நேரம் 40 நிமிடங்கள் விண் வெளியில் நடந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘பி’ தரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது சிலாவத்துறை பிரதேச ஆஸ்பத்திரி

மன்னார் மாவட்டத்தில், சிலாவத்துறை பிரதேச வைத்தியசாலை ‘பி’ தரம் கொண்ட வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சிலாவத்துறை பிரதேச வைத்தியசாலையை சகல வசதிகளுடனான ஆதார வைத்திசாலையாக அல்லது மாவட்ட வைத்தியசாலையாகத் தரம் உயர்த்துமாறு பிரேரித்திருந்தார்.

அதன் பயனாக இந்த பிரதேச வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலை பின்வரும் வசதிகளுடன் ‘பி’ தரம் கொண்ட பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, தரமான வெளி நோயாளர் பகுதி, போதிய விடுதி வசதிகள், சிறு அறுவை சிகிச்சை கூறு, பிரசவ அறை, புனர் வாழ்வுப் பிரிவு, நோயாளர் தொடர் சிகிச்சைப் பிரிவு, அடிப்படை ஆய்வு கூட வசதிகள், எக்ஸ்-ரே கதிரியக்க வசதிகள், ஈ. சி. ஜி., அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் வசதிகள், வருகை தரும் மருத்துவ நிபுணர்களின் சேவை, தரமான மருந்தகம், நவீன வசதிகளுடன் கூடிய அம்புலன்ஸ் போன்ற பல்வேறு வசதிகளைக் கொண்டதாக இருக்கும்.

இந்த வைத்தியசாலையை தரம் உயர்த்துமாறு முசலி, சிலாவத்துறை பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள் மற்றும் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தமைக்கு அமைவாகவே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார் எனக் கட்சியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.



# வவுணதீவில் கசிப்பு உற்பத்தி நிலையம்; 5 பரல் கோடா 150 போத்தல் கசிப்பு மீட்பு!

## 22 வயது இளைஞன் ஒருவர் கைது!!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள நெடுஞ்சேனை ஆற்றங்கரையில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை (9) பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 22 வயது இளைஞன் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். 05 பரல் கோடா, 150 போத்தல் கசிப்பு மற்றும் உற்பத்தி உபகரணங்களையும் மீட்டுள்ளனர் என்று வவுணதீவு பொலிஸ் நிலைய நிர்வாக பொறுப்பதிகாரி கே.வரதராஜன் தெரிவித்துள்ளார்.

விசேட புலனாய்வு பிரிவினருக்கும் மாவட்ட குற்ற தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கும் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து பொலிஸ் நிலைய நிர்வாக பொறுப்பதிகாரி கே.வரதராஜன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவதினமான நேற்று அதிகாலை நெடுஞ்சேனை ஆற்றுங்கரை பகுதியை



சுற்றிவளைத்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.


இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்தில் அண்மைக் காலமாக கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் - 5

கனடா முரசு

திங்கட்கிழமை 10/06/2024

## கல்கரிவாசிகளிடம் மேயர் மன்னிப்புக் கோருகின்றார்



கல்கரி நகரத்தில் நீர் விநியோகம் தடைப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கையில்

C2▶



# சர்ரேயில் இந்திய வம்சாவளி இளைஞர்

# சுட்டுக் கொல்லப்படமையால் அதிர்ச்சி!

**கடந்த வெள்ளியன்று கனடாவின் சர்ரே பகுதியில் இந்திய வம்சாவளி நபர் குடியிருப்பு அருகே துப்பாக்கியால் சுட்டு கொல்லப்பட்ட சம்பவம் அவரது மொத்த குடும்பத்தையும் உலுக்கியுள்ளது.**

**மாணவர்களுக்கான விசாவில் கடந்த 2019 இல் கனடாவுக்கு வந்தவர் யுவராஜ் கோயல். மிக சமீபத்தில் தான் அவர் நிரந்தர வதிவிட உரிமம் பெற்றார். 28 வயதான யுவராஜ் விற்பனை அதிகாரியாக பணிபுரிந்து வந்துள்ளார்.**

**யுவராஜ் எந்த குற்றப் பின்னணியும் இல்லாதவர் என்றும், அவர் கொலைக்கான காரணம் விசாரணையில் உள்ளது எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூன் 7 ஆம் திகதி பகல் சுமார் 8.46 மணிக்கு சர்ரே பொலிஸாருக்குத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், இரத்தவெள்ளத்தில் கிடந்த யுவராஜை மீட்டுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பில் தற்போது சந்தேகத்தின் அடிப்படையில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மூவர் இந்திய வம்சாவளி கனேடியர்கள் என்றும், ஒருவர் ஒன்ராறியோவில் குடியிருப்பவர் என்றும் கூறப்படுகிறது. சம்பவத்தின் போது யுவராஜ் உடற்பயிற்சி கூடத்தில் இருந்து திரும்பியுள்ளார்.

அவரதுகாரில்இருந்துஅவர்வெளியே வந்த அடுத்த நொடி துப்பாக்கியால் சுடப்பட்டார் என அவரது உறவினர் தெரிவித்துள்ளார்.

என்ன நடந்தது என்பதைத் தங்களால் நம்ப முடியவில்லை என்றும், ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை என்றும், குடும்பத்தில் அனைவரும் இதுவரை அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தின் போது இந்தியாவில் இருக்கும் தாயாருடன் யுவராஜ் அலைபேசியில் தொடர்பு கொண்டு ஒரு 30 நொடிகள் அல்லது ஒரு நிமிடம் பேசியிருப்பார் என்றும், அப்போது துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார் என்றும் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

# ஐம்பதாயிரம் யூதர்களின் பங்கேற்புடன் நேற்று ரொறன்ரோவில் 'இஸ்ரேலுடன் பவனி' பேரணி

## பலத்த பாதுகாப்பு, நெருக்கடிகளுக்கு மத்தியில்



ரொறன்ரோவின் யூத சமூகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒரு பெரிய நகரப் பாதையில் பேரணி சென்றனர். இது இஸ்ரேலுக்கு ஆதரவான வருடாந்திர நிகழ்வின் ஒரு பகுதி எனக் கூறப்பட்டது.

ஐக்கிய யூத கட்டமைப்பு அதன் வருடாந்திர 'Walk with Israel' (இஸ்ரேலுடன் பவனி) நிகழ்வை நடத்தியது. இதில் ஐந்து கிலோமீட்டர் நடைப் பயணமும் முடிவில் நகரின் வடக்கு முனையில் ஒரு திருவிழாவும் அடங்கும்.

C2▶




# 12 வயதுச் சிறுவனை வானில் கடத்த முயன்ற இரு யுவதிகள்

## தென்கிழக்கு எட்மண்டனில் சம்பவம்

தென்கிழக்கு எட்மண்டனில் வியாழனன்று இரண்டு பெண்கள் 12 வயது சிறுவனை பலவந்தமாகக் கூட்டிச் செல்ல முயன்றனர் என எட்மண்டன் பொலிஸார் கூறுகின்றனர். இது கடத்தல் முயற்சி என்றுன் அவர்கள் கூறுகின்றனர்.

சிறுவன் இரவு 7:30 மணியளவில் 55 தெருவுக்கு அருகிலுள்ள 38 அவென்யூவில் வீட்டிற்கு நடந்து கொண்டிருந்தபோது, ஸ்ப்ரிண்டர் பாணி சரக்கு வானில் இரண்டு பெண்கள் அவரை அணுகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ஒருவர்வானில்இருந்துஇறங்கி சிறுவனை வாகனத்தின் உள்ளே ஏறும்படி பலவந்தப்படுத்தினார் என்று கூறப்படுகிறது. எனினும் சிறுவன் அதற்கு மறுத்து வீட்டிற்கு ஓடித் தப்ப முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அமேசான் சாரதிகள் ஓட்டுவதைப் போலவே, கருப்பு அல்லது அடர் சாம்பல் நிற ஸ்ப்ரிண்டர் பாணி சரக்கு வான் அது என விவரிக்கப்பட்டுள்ளது.

பையனுடன் பேசிய பெண் வெள்ளை, சுமார் 30 வயது, நடுத்தர உடல் மற்றும் தோள்பட்டை நீளமுள்ள பழுப்பு நிற முடியுடன் விவரிக்கப்படுகிறார். அப்போது அவர் கருப்பு உடை அணிந்திருந்தார்.

பெண் அல்லது வானைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள், பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### கல்கரிவாசிகளிடம்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுபற்றிய விவரங்கள், திருத்த வேலைகள் பற்றிய தகவல்கள. வெள்யாவதில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் குறித்து நகர மேயர் ஜோதி கோண்டேக் ஞாயிற்றுக் கிழமை காலை கால்கேரி குடியிருப்பாளர்களிடம் மன்னிப்பு கேட்டார்,

நடந்துகொண்டிருக்கும் திருத்தப் பணிகள் பற்றிய தகவல்களைத் தொடர்பு கொள்வதற்கான நகரத்தின் முயற்சிகள் 'மெதுவாக, தாமதமாக வருகின்றன' மற்றும் 'சில நேரங்களில் குழப்பமாக உள்ளன' என்று அவர் கூறினார்.



"முன்னோக்கிச் செல்லும்போது, என்ன நடந்தது, இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு எதிர்பார்க்கப்படும் காலக்கெடு மற்றும் நீர் பாதுகாப்பு வழியில் எங்களுக்கு என்ன தேவை என்பவற்றை விளக்கும் ஓர் அறிவிப்பைத் தருவோம்" என்று கோண்டேக் செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

இன்று திங்கட்கிழமை தொடங்கி, தினமும் காலை 8:30 மணிக்கு லைவ்ஸ்ட்ரீம் மூலம் கல்கரியர்களுக்கு ஒரு புதுப்பிப்பு தகவல் அறிவிப்பு வழங்கப்படும் என்றய் கோண்டேக் கூறினார். மேலும், நகரின் அவசர மேலாண்மை குழு பிற்பகல் 2 மணிக்கு ஊடக சந்திப்புகளை நடத்தவுள்ளது. ஒவ்வொரு நாளும் முன்னேற்றம் குறித்து குடியிருப்பாளர்களைப் புதுப்பிக்கப்பட்ட தகவல் வழங்கப்படும்.

தண்ணீர் விநியோகம் இயல்பு நிலைக்கு திரும்பும் வரை தினசரி நிலைமை பற்றிய அறிவிப்புக தொடரும் என்று மேயர் கூறினார்.

### ஐம்பதாயிரம்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபவனியில் பங்கேற்பாளர்கள், சாதனை எண்ணிக்கையில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது, இஸ்ரேலிய கொடிகளை அசைத்து, இஸ்ரேலுடன் சமீபத்திய போரைத் தூண்டும் விதத்தில் ஒக்டோபர் 7 அன்று ஹமாஸ் நடத்திய தாக்குதலின் போது பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டவர்கள் பற்றிய பதகைகளை ஏந்தி அவர்கள் பவனி சென்றனர்.

நடை பவனியில் ஐம்பதாயிரம் பேர் பங்கேற்றனர் என ஐக்கிய யூத கட்டமைப்பு மதிப்பிட்டுள்ளது, ஆனால் ஞாயிற்றுக்கிழமையின் பின்னர் நிகழ்வு முழுமையாக முடிவடையும் வரை தங்களால் உத்தியோகபூர்வ மதிப்பீட்டைத் தர இயலாது என்று ரொறன்ரோப் பொலிசார் தெரிவித்தனர்.

ஊர்வலத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. தனியார் பாதுகாப்புப் பணியாளர்களின் பிரசன்னம் அதிகம் இருந்தது.

பாதர்ஸ்ட் தெருவின் ஒரு பெரிய பகுதி நிகழ்வுக்காக தடுக்கப்பட்டது.

நடைப்பயணத்தின் முதல் மணி நேரத்திற்குள் ஆர்ப்பாட்டக்காரர்களின் இரண்டு குழுக்களை அணிவகுப்பவர்கள் எதிர்கொண்டனர். நிகழ்வை ஆர்ப்பாட்டக்காரர்களின் பார்வையிலிருந்து தடுக்க பொலிஸார் பஸ்களைத் தசுப்புகள் மற்றும் மறைப்புகளாகப் பயன்படுத்தினர்.

குழுக்கள் பாதர்ஸ்ட் தெரு மற்றும் ஷெப்பர்ட் அவென்யூவின் மூலையில் பாதைகளைக் கடக்கும்போது சில சூடான பரிமாற்றங்கள் நடந்தன. பொலிஸ் அதிகாரிகள் இரு குழுக்களிடையே தடுப்புகளை ஏற்படுத்தி மோதலில் தலையிட்டனர்.

அணிவகுப்பு வழியில் எதிர்கொண்ட பல பாலஸ்தீனிய ஆதரவு எதிர்ப்பாளர்கள் கருத்துக் கூறக் கேட்ட கோரிக்கையை நிராகரித்தனர்.




# 107ஆம் பிறந்த நாளை கொண்டாடும் மூதாட்டி!

கனடாவில் மூதாட்டி ஒருவர் தனது 107 ஆவது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடியுள்ளார்.

லேக்சோர் பகுதியைச் சேர்ந்த ஒல்கா வைற் என்ற பெண்ணே இவ்வாறு தனது 107 ஆம் பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார்.

நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டுமாயின் நம்மை நாமே நேசிக்க வேண்டும் எனவும் பராமரிக்க வேண்டுமெனவும் ஒல்கா தெரிவித்துள்ளார்.

சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டும் எனவும், நாள் தோறும் நாம் விரும்பும் செயற்பாடுகளை செய்ய வேண்டும் எனவும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

1917 ஆம் ஆண்டு உக்ரைனில் பிறந்த ஒல்கா, முதலாம் உலகப் போர் காலத்தில் கனடாவில் குடியேறியுள்ளார்.

99 வயது வரையில் சொந்த வீட்டில் வாழ்ந்து வந்த ஒல்கா தற்பொழுது முதியோர் பராமரிப்பு நிலையமொன்றை தங்கியுள்ளார்.

# 3 பிள்ளைகள், கணவரப் பறி கொடுத்த பெண்மணியின் வீடும் எரிந்து போனது





கனடாவின் கிழக்கு ஒன்ராறியோ வில் சாலை விபத்தில் தமது மூன்று பிள்ளைகளை மொத்தமாக பறி கொடுத்த பெண் ஒருவரின் குடியிருப்பும் தீக்கிரையானதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2015 இல் மது அருந்தி வாகனம் செலுத்திய ஒருவரால் ஜெனிபர் நெவில் லேக் என்பவரின் மூன்று பிள்ளைகள் பரிதாபமாக மரணமடைந்தனர். இந்த துயரத்தில் இருந்து மீண்டு வரும் நிலையில், 2022ல் இவரது கணவர் தற்கொலை செய்து கொண்டார்.

கடைசியாக தற்போது அவரது குடியிருப்பும் தீக்கிரையாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பிள்ளைகள் மூவரின் சாம்பல் கலசமும் இந்த தீ விபத்தில் சேதமடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீ விபத்தின் போது அவர் குடியிருப்பில் இல்லை என்றும், வீடு திரும்பும் போது தான் நெருப்பு பற்றியெரிவதை காண நேர்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மட்டுமின்றி, 2015 இல் பிள்ளைகள் மரணமடைந்த பின்னர் இரங்கல் குறிப்புகள் அடங்கிய பதிவேடு ஒன்றும் தீக்கிரையானதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை வீடு தீக்கிரையானதாக தீயணைப்பு வீரர்கள் உறுதி செய்துள்ளனர். ஆனால் அதற்கான காரணம் தொடர்பில் தகவல் ஏதும் வெளியிட மறுத்துள்ளனர். விசாரிக்கப்பட்டு வருவதாகவே ஜெனிபர் நெவில் லேக் தெரிவித்துள்ளார்.

உண்மையில் தீக்கிரையான வீடானது அவரது பிள்ளைகள் மற்றும் கணவருடன் ஜெனிபர் நெவில் லேக் வாழ்ந்த வீடல்ல என்றும், அது பிராம்டன் பகுதியில் உள்ளது என்றும் கூறப்படுகிறது.



# றொறன்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் வெடிகுண்டு அச்சுறுத்தல் தொடர்பான விசேட பயிற்சி

றொறன்ரோவின் பியர்சன் சர்வ தேச விமான நிலைய அதிகாரிகள் அதன் டெர்மினல் (முனையம்) ஒன்றில் நேற்று முன்தினம் சனிக் கிழமை இரவு இரவு வெடிகுண்டு அச்சுறுத்தல் தொடர்பான விசேட பயிற்சி நடவடிக்கை ஒன்று மேற்கொண்டனர்.

பாரியளவிலான வெடிப்புச் சம்பவமொன்றின் போதான நிலைமைகளின் அடிப்படையில் சனிக்கிழமை இரவு 11.30 மணி முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிவரை இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

நூற்றுக் கணக்கான தன்னார்வ தொண்டர்கள், பீல் பிராந்திய காவல் துறை, டொராண்டோ பியர்சன் தீயணைப்பு அவசர சேவைகள் மற்றும் ஏர் கனடா உட்பட என பல தரப்புகளையும் சேர்ந்த சுமார் 300 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.

விமான நிலையத்தில் வெடிப்புச் சம்பவமொன்றின் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்த ஒத்திகைப் பயிற்சியே மேற்கொள்ளப் பட்டது.

இந்த நேரத்தில் மிகவும் குறைந்த அளவிலான பயணிகள் விமான நிலையத்தில் இருக்கக் கூடும் என்ற காரணத்தினால் இந்த நேரத்தை அதிகாரிகள் தெரிவு செய்து இந்தப் பயிற்சியை முன்னெடுத்தனர்.

எவ்வாறெனினும் இந்த ஒத்திகையின் போது பயணிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. வழமை போன்று தடையின்றி அவர்கள் தத்தமது பயணங்களை மேற்கொண்டனர்.

"முனையத்தில் நடக்கும் வெடிப்புக்கு எங்கள் பதிலை இந்த நடவடிக்கை மூலம் உருவகப்படுத்துகிறோம்" என்று பியர்சன் விமான நிலைய செய்தித் தொடர்பாளர் சீன் டேவிட்சன் விளக்கினார்.

"இது உண்மையில் எங்களின் பிரதிபலிப்புகள் மற்றும் அவசரகால சேவைகளின் பதிலை ஆய்வுக்கு உட்படுத்துவதற்காக நடக்கும் பயிற்சி. எந்தவொரு அவசரநிலைக்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை உறுதி செய்ய வேண்டும். நாங்கள் இதைப் பார்த்து, எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அவசரநிலைக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்த, அதைச் செயற்படுத்துகிறோம்." – என்றார் அவர்.











# றொறன்ரோவின் லிட்டில் போர்ச்சுகலில் வரலாற்றுத் தேவாலயம் தீக்கிரையானது!

றொறன்ரோவின் லிட்டில் போர்ச்சுகல் பகுதியில் உள்ள ஒரு வரலாற்று தேவாலயம் ஞாயிற்றுக்கிழமை தீயினால் முற்றிலுமாக எரிந்து நாசமானமையை அடுத்து புலனாய்வாளர்கள் அது குறித்து இப்போது விசாரணை நடத்தி வருகிறார்.

டன்டாஸ் தெரு மேற்குக்கு வடக்கே 270 கிளாட்ஸ்டோன் அவேயில் உள்ள சென் ஆன்ஸ் அங்கிலிகன் தேவாலயத்திற்கு, நேற்றுக் காலை 8 மணிக்கு சற்று முன் அவசரக் குழுவினர் அழைக்கப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அச்சமயம் தேவாலயத்தில் இருந்து அடர்ந்த கரும் புகை வருவதைக் கண்டனர் எனவும், அது பின்னர் முழுமையாக தீப்பிடித்து எரிந்துவிட்டது எனவும் ஞாயிற்றுக்கிழமை மாலை செய்தி வெளியீட்டில், றொறன்ரோ பொலிஸார் கூறியுனர்.

அப்பகுதியில் முதலில் பிடிக்கப்பட்ட படக் காட்சிகள் கட்டடத்தின் சின்னமான குவிமாடக் கூரை வழியாக புகை மற்றும் தீப்பிழம்புகள் வெளியேறுவதைக் காட்டின.

தீயினால் கட்டிடம் முழுவதும் சேதம் ஏற்பட்டது. தீயின் நள்ளிரவில் முழுமையாக அணைக்கப்பட்டதாயினும், தீயணைப்புக் குழுவினர் சம்பவ இடத்திலேயே தொடர்ந்து நிலை கொண்டு வெப்பமான இடங்களைக் கையாண்டு வருகின்றனர்.

தீ விபத்தின் போது தேவாலயத்தில் யாரும் இருக்கவில்லை என்றும், காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

"இப்போது கட்டடம் உள்ளே உள்ள அனைத்து கலைப்பொருட்களுடன் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டது" என்று துணை தீயணைப்புத் தலைவர் ஜிம் ஜெசோப் கூறினார். தீ விபத்துக்கு என்ன காரணம் என்று யூகிக்க காலம் தேவைப்படும் என்று அவர் கூறினார்.

றொறன்ரோ பொலிஸ் சேவை, றொறன்ரோ தீயணைப்பு சேவைகள் மற்றும் தீயணைப்பு மார்ஷல் அலுவலகம் மற்றும் அவசரகால முகாமைத்துவம் ஆகியவை இப்போது விசாரணையை ஆரம்பித்துள்ளன.

பொதுமக்கள் புகைப்படங்கள் அல்லது வீடியோ காட்சிகளை சமர்ப்பிக்க ஒன்லைன் போர்ட்டலை போலீசார் அமைத்துள்ளனர்.

தகவல் தெரிந்த எவரும் 416-808-1400 என்ற எண்ணில் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது க்ரைம் ஸ்டாப்பர்களை அநாமதேயமாகத் தொடர்பு கொள்ளலாம் என்று கூறப்பட்டது.

# வரலாற்று சிறப்புக் கொண்ட அருங்காட்சியகம் தீக்கிரை!



டிக்பி கவுண்டியில் உள்ள மெட்டெகன் ஆற்றில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க மரத்தூள் ஆலை மற்றும் அருங்காட்சியகம் ஆகியன நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை தீயில் எரிந்து நாசமாகின.

மெட்டெகன் தீயணைப்புத் துறையின் தலைவர் கெவின் சால்னியர் கூறுகையில் "பாங்கோர் சாமில் அருங்காட்சியகத்தில் தீ விபத்து பற்றி அதிகாலை 4 மணியளவில் அழைப்பு வந்தது. குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்த போது கட்டடம் முழுவதும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது" என்றார்.

யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், அருங்காட்சியகத்தில் இருந்த சில தொல்பொருட்களை பணியாளர்களால் காப்பாற்ற முடிந்தது என்றும் அவர் கூறினார்.

தீ எதனால் ஏற்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று சால்னியர் கூறினார்.

1980 களில் பாங்கோர் மரம் அறுக்கும் ஆலை மூடப்பட்டது. 2001 இல் ஓர் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.